**கவனிக்க.-** *10.08.2012 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (III) மற்றும் பகுதி IV (அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1772 - 2012 අගෝස්තු මස 17 වැනි සිකුරාදා - 2012.08.17

*1772 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 17 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 1236 |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 1244 |
| துணைவிதிகள் | - |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - |
| வரவு செலவுக் கூற்றுகள் | - |
| வரவு செலவு திரட்டுகள் | - |
| ஆதன விற்பனைகள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| நானாவித அறிவித்தல்கள் | - |


### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான
### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2012, செத்தெம்பர் மாதம் 07 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2012, ஓகத்து மாதம் 24 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**பி. கே. எஸ். ரவீந்திர,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2012 ஆம் ஆண்டு யூன் மாதம் 23 ஆந் திகதி.

# பதவிகள் — வெற்றிடம்

## மஹநுவர கடவத் சத்தர மற்றும் கங்கவட்ட கோறளை பிரதேச சபை

மஹநுவர கடவத் சத்தர மற்றும் கங்கவட்ட கோறளை பிரதேச சபையில் நிலவும் பின்வரும் ஆரம்ப (தேர்ச்சி இல்லாத) பதவி வெற்றிடங்களின் ஆட்சேர்ப்புக்காக இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகுதிகளைக் கொண்டுள்ள பிரதேச சபையின் எல்லைக்குள் வதிவிடத்தைக் கொண்ட வர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன :-

(1) சுகாதாரத் தொழிலாளர்கள் (III வகுப்பு)
(2) காவற்காரர் (II வகுப்பு)

2. **சம்பளத்திட்டம்**.- இந்தப் பதவிக்குரிய சம்பள அளவுத்திட்டம் பொது நிருவாகச் சுற்றறிக்கை 6/2006 (IV) இல் PL 1-2006-A இன் படி ரூபா 11,730 - 10 × 120 - 10 × 130 - 10 × 145 - 12 × 160 - ரூபா 17,600 (நான்காவது படிக்கு உயர்த்தப்படுமுன் தகுதிகாண் தடை உண்டு.)

3. **ஆட்சேர்ப்புக்கான பொது நிபந்தனைகள்** :

3.1 விண்ணப்பதாரிகள் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்;

3.2 விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று மஹநுவர கடவத் சத்தர மற்றும் கங்கவட்ட கோறளை பிரதேச சபையின் நிருவாக எல்லைக்குள் ஆகக் குறைந்தது 03 வருடகால நிரந்தர வதிவைக் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

வெற்றிடங்களை நிரப்புவதற்குப் போதுமான அளவில் தகுதியா னோர் நிருவாக எல்லைக்குள் இல்லாத பட்சத்தில் மட்டும் அண்மையிலுள்ள உள்ளூராட்சி அமையங்களின் விண்ணப்பதாரிகளது விண்ணப்பங்கள் கவனத்திற் கொள்ளப்படும்.

3.3 விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதியன்று 18 வயதுக்குக் குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படதவராகவும் இருத்தல் வேண்டும். ஏற்கனவே அரச அல்லது மாகாண அரச சேவையில் உள்ளோருக்கு இந்த வயதெல்லை பொருந்தாது.

3.4 விண்ணப்பதாரிகள் சிறந்த நன்னடத்தை உடையவராகவும் சிறந்த தேகாரோக்கியம் உள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.

4. **சேவையில் ஈடுபடுத்தப்படும் நிபந்தனைகள்**:

4.1 இந்தப் பதவிகள் நிரந்தரமானவை, ஓய்வூதியம் கொண்டவை.

4.2 விதவைகள், அநாதைகள் ஓய்வூதிய நிதியத்துக்குப் பங்களிப்புச் செய்தல் வேண்டும்.

4.3 தெரிவுசெய்யப்படுவோர் மூன்றுவருட கால தகுதிகாண் சேவைக்கு உட்படுவர். தகுதிகாண் சேவைக்காலத்தில் இறுதியில் வேலை நடத்தை, மற்றும் வரவு என்பவற்றில் திருப்தியுள்ளோரது நியமனங்கள் நிரந்தரமாக்குவதற்கெனக் கவனத்திற் கொள்ளப்படும்.

4.5 2007.05.28 ஆந் திகதிய 07/2007 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கையின்படி சேவையில் இணைந்து 5 வருட காலத்துக்குள் சேவையில் இணைந்த மொழிமூலத்துக்கு மேலதிகமாக ஏனைய அரச கரும மொழிகள்பற்றிய தேர்ச்சியைப் பெறுதல் வேண்டும். இதற்கென சபையின் செயலாளர் நடத்தும் வாய்மொழித் தேர்வில் சித்தி பெறுதல் வேண்டும்.

4.6 இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ஆட்சேர்ப்பு நிபந்தனைகள் மத்திய மாகாண அரச சேவையின் (உள்ளூராட்சி அமையங்கள்) அலுவலகக் கருமங்கள் சேவையின்ஆரம்ப சேவை (தேர்ச்சி அற்ற) விதிகளுக்கும், தாபனக் கோவை நிபந்தனைகளுக்கும், நிதிப் பிரமாணங்களுக்கும் மேலதிகமாக அரச, மாகாண சபை மற்றும் சபையின் செயலாளர் ஆகியோர் பிறப்பிக்கும் கட்டளைகளுக்கும் மத்திய மாகாண அரச சேவை ஆணைக்குழு காலத்துக்குக் காலம் விதிக்கும் ஒழுங்கு விதிகளுக்கும் அமைய செயற்படுவதற்கு உட்படுதல் வேண்டும்.

5. **ஆட்சேர்ப்புக்கான தகைமைகள்**:

5.1 சுகாதாரத் தொழிலாளர் III ஆம் வகுப்பு.- கல்விப் பணிப்பாளர் நாயகம் அங்கீகரித்த பாடசாலையொன்றில் தரம் 8 (ஆண்டு 9) இற்குரிய பாடத்திட்டங்களைப் பூர்த்தி செய்திருத்தல்.

5.2 காவற்காரர் - III ஆம் வகுப்பு.- இரு தடவைகளுக்கு மேற்படாது க. பொ. த. (சா. த.) பரீட்சையில் அல்லது தேசிய பொது கல்விச் சான்றிதழ் பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாது சிங்களம் அல்லது தமிழ்மொழி உட்படக் குறைந்தது ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

6. **தகுதிகாண் தடை**.-ஆட்சேர்ப்பு வகுப்புக்குரிய சம்பளத் திட்டத்தின் நான்காவது படிக்கு வருவதற்கு முன் தகுதிகாண் தடை உண்டு.

7. **ஆட்சேர்ப்பு முறை**:

7.1 விண்ணப்பித்த அனைவரும் மற்றும் ஆட்சேர்ப்புக்கான தகுதியைப் பெற்றுள்ள அனைவரும் கட்டமைப்பு நேர்முகப் பரீட்சையொன்றுக்கு உட்படுத்தப்படுவர்.

தகுதியைப் பெற்றுள்ள விண்ணப்பதாரிகள் மட்டும் நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்படுவர். நேர்முகப் பரீட்சை நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும். குறித்த நேர்முகப் பரீட்சையின் போது பின்வரும் ஆவணங்களை அவற்றின் நிழற்படப் பிரதிகளுடன் சமர்ப்பித்தல் வேண்டும் :-

I. பிறப்புச் சான்றிதழின் மூலப்பிரதி ;
II. கல்வித் தகைமைச் சான்றிதழ்கள் மூலப் பிரதி /பாடசாலை விடுகைப் பத்திரம் ;
III. அண்மையில் பெறப்பட்ட கிராம அலுவலர் சான்றிதழ் ;
IV. அண்மையில் பெறப்பட்ட இரண்டு குணச் சான்றிதழ்கள் ;
V. ஏனைய தகைமைகளைக் காட்டும் சான்றிதழ்கள் ;
VI. சேவைச் சான்றிதழ்கள்.

7.2 நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றிய விண்ணப்பதாரிகளுள் அதிகூடிய தகைமைகளையுடைய விண்ணப்பதாரிகளைக் கொண்டு வெற்றிடங்கள் நிரப்பப்படும்.

7.3 மஹநுவர கடவத் சத்தர மற்றும் கங்கவட்ட கோறளை பிரதேச சபையில் ஏற்கனவே சேவையில் ஈடுபட்டிருக்கும் தற்காலிக அமைய பதிலீட்டு, ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றுவோரது விண்ணப் பங்கள் மீது விசேட கவனம் செலுத்தப்படும்.

8. **விண்ணப்பிக்க வேண்டிய முறை** :

8.1 ஒரு விண்ணப்பதாரி ஒரு பதவிக்கு மட்டுமே விண்ணப்பித்தல் வேண்டும் ;

8.2 இந்த அறிவித்தலில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பத்துக் கமைய A4 தாளின் இரு பக்கங்களிலும் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படி வங்களை 2012.09.28 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கும் வண்ணம் "செயலாளர், மஹநுவர கடவத் சத்தர மற்றும் கங்கவட்ட கோறளை பிரதேச சபை, அம்பிட்டி" என்ற முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும். (விண்ணப்பப் படிவம் மாத்திரம் போதுமானது).

8.3 விண்ணப்பங்களைக் கொண்ட கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "மஹநுவர கடவத்த சதர மற்றும் கங்கவட்ட கோறளை பிரதேச சபையின் பதவி வெற்றிடங்களுக்கான ஆட்சேர்ப்பு" எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

8.4 பூரணமற்ற தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

8.5 விண்ணப்பதாரியின் கையொப்பத்தை அரசாங்கப் பாடசாலை அதிபர், சமாதான நீதிவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், பிரசித்த நொத்தாரிசு, முப்படையின் அதிகாரம் பெற்ற அலுவலர், பொலிஸ் சேவை உயர்அதிகாரி, அல்லது ரூபா 2,40,360.00 இற்கு மேல் ஆண்டுச் சம்பளம் பெறும் அரச அலுவலர்ஆகியோருள்ஒருவர் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

8.6 ஏற்கனவே அரச சேவையில் பணிபுரிவோரது விண்ணப்பங் கள் அவர்களது திணைக்களத் தலைவரூடாக அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

9. ஆட்சேர்ப்பு செய்யப்படுவோரது எண்ணிக்கை மற்றும் நியமனம் செயற்படும் திகதி என்பவற்றை மஹநுவர கடவத் சத்தர மற்றும் கங்கவட்ட கோறளை பிரதேச சபையின் செயலாளர் தீர்மானிப்பார். இந்த விண்ணப்பங்கள் கோரப்பட்டதன் பின்னர் அல்லது அதற்கிடையில் இந்த ஆட்சேர்ப்பைத் தாமதப்படுத்தும் மாற்றியமைக்கும் அல்லது அறிவிப்பைத் திருத்தும், இரத்துச்செய்யும் அனைத்து அதிகாரங்களும் மஹநுவர கடவத்த சத்தர மற்றும் கங்கவட்ட கோறளை பிரதேச சபையின் செயலாளருக்கு உண்டு.

எஸ். ஆர். அதாவுத,
செயலாளர்,
மஹநுவர கடவத் சத்தர மற்றும்
கங்கவட்ட கோறளை பிரதேச சபை.

மஹநுவர கடவத் சத்தர மற்றும்
கங்கவட்ட கோறளை பிரதேச சபை அலுவலகம்.
2012.07.20.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**மஹநுவர கடவத் சத்தர மற்றும் கங்கவட்ட கோறளை பிரதேச சபை**

காவற்காரர்/சுகாதாரத் தொழிலாளர் பதவி

இலக்கம் [ ]
அலுவலகப் பாவனைக்கு

1. 1. முதலெழுத்துக்களுடன் பெயர் : ----.
 2. முதலெழுத்துக்களால் குறிக்கப்படும் பெயர் : ----.
2. 1. நிரந்தர முகவரி : ----.
 2. தற்போது அரச சேவையில் உள்ளவராயின் அலுவலக முக வரி : ----.
3. 1. பிறந்த திகதி : ஆண்டு : ----, மாதம் : ----, திகதி : ----.
 2. 2012.09.28 ஆந் திகதி உள்ளவாறான வயது :-
 வருடங்கள் : ----. மாதங்கள் : ----, நாட்கள் : ----.
4. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் :----.
5. ஆண்/பெண் :----.
6. கல்வித் தகைமைகள் :----.
 1. கல்வி கற்ற பாடசாலை :----.
 2. பெற்றுள்ள அதி உயர் தகைமை :----.
 (தரம் 8 (ஆண்டு 9) இன் பாடத்திட்டத்தை முடித்திருப்பின் அது பற்றி குறிப்பிடவும்.)
 3. க. பொ. த. (சாதாரண தரம்) :

தோற்றிய வருடம் :----. சுட்டிலக்கம் :----.

| பாடம் | சித்தி | பாடம் | சித்தி |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

 4. க. பொ.த. (உயர் தரம்):-
 (இப்பகுதி நிரப்பப்படுவது கட்டாயமல்ல சித்தியடைந்திருப்பின் மாத்திரம் நிரப்பவும்)

தோற்றிய வருடம் :----. சுட்டிலக்கம் :----.

| பாடம் | சித்தி |
|---|---|
| | |
| | |
| | |
| | |

7. ஏனைய தகைமைகள் : ----.
8. சேவை அனுபவம் : ----.

**விண்ணப்பதாரியின் உறுதியுரை** : இந்த விண்ணப்ப படிவத்தில் என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள் அனைத்தும் நான் அறிந்த வரையில் சரியானவை எனவும் உண்மையானவை எனவும் உறுதிப்படுத்து கின்றேன். மேற்குறித்த தகவல்கள் பொய்யானவை என நிரூபிக்கப் பட்டால், நியமனத்துக்கு முன்னரெனின், தகுதியற்றவராக ஆக்கப்படு வேன் என்பதையும், நியமனத்தின் பின்னரெனின் நட்டஈடின்றி சேவையிலிருந்து விலக்கப்படுவதற்கு ஆளாவேன் என்பதையும் அறிவேன்.

--------,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி : ----.

9. **விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்துதல்:**

இந்த விண்ணப்பத்தை முன்வைக்கும் ................ என்பவரை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் என்பதையும் இன்று அவர் என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்பதனையும் உறுதிப்படுத்து கிறேன்.

--------,
உறுதிப்படுத்துபவரது கையொப்பம்.

உறுதிப்படுத்துபவரின் முழுப்பெயர் : ----.
பதவி : ----.
முகவரி : ----.

10. **அரச/மாகாண அரச சேவையில் உள்ள விண்ணப்பதாரி யாயின் திணைக்களத் தலைவரின் சான்றிதழ்** : இந்த விண்ணப்பத்தை முன்வைக்கும் ............... என்பவர் இந்த நிறுவனத் தில்/திணைக்களத்தில் .............. ஆகப் பணிபுரிகின்றார். கடந்த சில வருடங்களுக்குள் அவர் எவ்விதமான தண்டனைக்கும் உட்பட்டவரல்ல என்பதையும் குறித்த பதவிக்கென அவர் தெரிவு செய்யப்பட்டால் அவரை விடுவிக்க முடியும் என்பதையும் உறுதிப்படுத்துகிறேன்.

-------,
நிறுவனத் தலைவரது கையொப்பம்.

திகதி : 2012.
8-441

## ஹாரிஸ்பத்து பிரதேச சபை

மத்திய மாகாண அரச சேவையில் ஹாரிஸ்பத்து பிரதேச சபையில் நிலவும் பின்வரும் பதவி வெற்றிடங்களுக்கென ஆட்சேர்ப்புக்காக இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகுதிகளைக் கொண்டுள்ள ஹாரிஸ்பத்து பிரதேச சபையின் எல்லைக்குள் நிரந்தர வதிவிடத்தைக் கொண்ட இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன :-

| பதவிப் பெயர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | சம்பளத் திட்டம் | கல்வித் தகைமைகள் |
|---|---|---|---|
| சுகாதாரப் பணியாளர்கள் | 01 | ரூபா 11,730-10X 120-10X130-10X145-12X160-ரூபா 17,600 பொ. நி. சு. 6/2006 (IV) P.L-I-2006-A சம்பளத்திட்டத்தின் 01 ஆவது படி ஆரம்ப சம்பளப் படி ஆகும். (4 ஆவது சம்பளப் படிக்கு வரமுன்னர் தகுதிகாண் தடை உண்டு) | ஆகக்குறைந்தது தரம் 8 இல் (ஆண்டு 9 இல்) சித்தி பெற்று இருத்தல் வேண்டும். |

2. **தேவையான ஏனைய தகைமைகள்** .- (1) விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதியன்று 18 வயதுக்குக் குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். ஹாரிஸ்பத்து பிரதேச சபையில் ஏற்கனவே சேவையில் உள்ள நிரந்தர/அமைய பணியாளருக்கு இந்த வயதெல்லை பொருந்தாது ;

(2) விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று ஹாரிஸ்பத்து பிரதேச சபையின் நிருவாக எல்லைக்குள் ஆகக் குறைந்தது 03 வருடகால நிரந்தர வதிவைக் கொண்டவராக இருத்தல் வேண்டும் ;

(3) சிறந்த நன்னடத்தை உடையவராகவும், சிறந்த தேகாரோக்கியம் உள்ளவராகவும் இருத்தல் வேண்டும் ;

(4) குற்றவியல் சட்டக்கோவையின்கீழ் நீதிமன்றத்தினால் குற்றவாளியாக்கப்பட்டு தண்டிக்கப்பட்டவராக இருத்தல் கூடாது ;

(5) அரச அல்லது மாகாண அரச சேவையிலிருந்து நீக்கப்பட்டவராகவோ அல்லது பொது நிருவாக 44/90 சுற்றறிக்கையின் கீழ் ஓய்வு பெற்றவராகவோ இருத்தல் கூடாது ;

(6) ஹாரிஸ்பத்துவ பிரதேச சபையில் தற்போது பதிலீட்டு அடிப்படையில் பணியாற்றுவோர் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படும்.

3. **சேவை நிபந்தனைகள்**.- (1) இந்தப் பதவிகள் நிரந்தரமானவை. ஓய்வூதியம் கொண்டவை.

(2) விதவைகள், அநாதைகள் ஓய்வூதிய நிதியத்துக்குப் பங்களிப்புச் செய்தல் வேண்டும்.

(3) தெரிவுசெய்யப்படுவோர் மூன்று வருடகால தகுதிகாண் சேவைக்கு உட்படுவர்.

(4) இந்த ஆட்சேர்ப்பு நிபந்தனைகளுக்கும் விதிகளுக்கும் மேலதிகமாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக் கோவை நிபந்தனைகளுக்கும், நிதிப்பிரமாணங்களுக்கும், அரச திணைக்களங்களது கட்டளைகளுக்கும் மத்திய மாகாண சபை அல்லது ஹரிஸ்பத்துவ பிரதேச சபை காலத்துக்குக் காலம் விதிக்கும் நியமங்களுக்கும் அமைய செயற்படுவதற்கு உட்படுதல் வேண்டும்.

**விண்ணப்பிக்கவேண்டிய முறை**.- இந்த அறிவித்தலில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பத்துக்கமைய 12×8 அளவு தாளில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்களை 2012.08.17 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கும்வண்ணம் "செயலாளர், ஹாரிஸ்பத்துவ பிரதேச சபை, பரிகம, வெரல்லகம" என்ற முகவரிக்குப் பதிவுத்தபாலில் அல்லது நேரிலோ அனுப்பிவைத்தல் வேண்டும். விண்ணப்பங்களைக் கொண்ட கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவிப்பெயரைக் குறிப்பிடுதல் வேண்டும். பூரணமற்ற மற்றும் தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

4. விண்ணப்பப்படிவத்துடன் பின்வரும் ஆவணங்களது உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளை அனுப்பிவைத்தல் வேண்டும் :-

(1) பிறப்புச் சான்றிதழ் ;
(2) கல்வித் தகைமைச் சான்றிதழ்கள் ;
(3) வதிவிடச் சான்றிதழ் ;
(4) அண்மையில் கிராம அலுவலரால் வழங்கப்பட்ட சான்றிதழ் ;
(5) அண்மையில் பெறப்பட்ட குணச் சான்றிதழ் ;

(6) ஏனைய தகுதிகளைக் காட்டும் சான்றிதழ்கள் ;
(7) சேவை அனுபவச் சான்றிதழ்கள்.

5. **ஆட்சேர்ப்பு முறைகள்**.- (1) விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சை ஒன்றுக்கு உட்படுத்தப்பட்டு தகைமைகள் பரிசீலிக்கப்பட்டும், செய்முறைப் பரீட்சையொன்றுக்கு உட்படுத்தப்படும் புள்ளிகள் பெறும் முன்னுரிமையின்படி சுகாதாரத் தொழிலாளர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்யப்படுவர்.

(2) இந்த விண்ணப்பங்கள் கோரப்பட்டதன் பின்னர் அல்லது அதற்கிடையில் இந்த ஆட்சேர்ப்பைத் தாமதப்படுத்தும், மாற்றியமைக்கும் அல்லது அறிவிப்பை திருத்தும், இரத்துச்செய்யும் அனைத்து அதிகாரங்களும் ஹாரிஸ்பத்துவ பிரதேச சபையின் செயலாளருக்கு உண்டு.

டி. ஜி. எம். பி. ரணசிங்க,
செயலாளர்,
ஹாரிஸ்பத்துவ பிரதேச சபை.

ஹாரிஸ்பத்துவ பிரதேச சபை,
பரிகம, வெரல்லகம,
2012.07.24.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**ஹாரிஸ்பத்து பிரதேச சபை**

சுகாதாரத் தொழிலாளர் பதவிக்கான விண்ணப்பப்படிவம்

1. விண்ணப்பதாரியின் முழுப்பெயர் :----.

2. முகவரி :----.

3. பிறந்த திகதி :

ஆண்டு :----, மாதம் :----, திகதி :----.

4. விண்ணப்பிக்கும் கடைசித்திகதியில் உள்ளவாறு வயது :----.

வருடங்கள் :----, மாதங்கள் :----, நாட்கள் :----.

5. ஆண்/பெண் :----.

6. விவாகமானவரா/தனித்தவரா ? :----.

7. தேசிய அடையாள அட்டை இலக்கம் :----.

8. தேசிய இனம் :----.

9. வம்சாவளியினாலா அல்லது பதிவினாலா இலங்கைப் பிரசை ? :----.

ஹாரிஸ்பத்து பிரதேச சபை எல்லைக்குள் நிரந்தர வதிவுக் காலம் :----.

10. கல்வித் தகைமைகள் :-

க. பொ. த. (சாதாரண தரம்)

தோற்றிய வருடம் :-

| பாடம் | சித்தி | பாடம் | சித்தி |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

11. சேவை அனுபவம் :----.

12. ஏனைய கல்வித் தகைமைகள் :----.

13. நீங்கள் எப்போதாயினும் நீதிமன்றத்தினால் குற்றவாளியாகக் காணப்பட்டுள்ளீரா? :-----.

இந்த விண்ணப்பப்படிவத்தில் என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள் அனைத்தும் நான் அறிந்தவரையில் சரியானவை எனவும் உண்மையானவை எனவும் உறுதிமொழிகின்றேன். மேற்குறித்த தகவல்கள் பொய்யானவை என நிரூபிக்கப்பட்டால் நியமனத்துக்கு முன்னரெனின், தகுதியற்றவராக ஆக்கப்படுவேன் என்பதையும், நியமனத்தின் பின்னரெனின், நட்டஈடின்றிச் சேவையிலிருந்து விலக்கப்படுவதற்கு உட்படுவேன் என்பதையும் அறிவேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

8-460

---

**வத்தேகம நகர சபை**

மத்திய மாகாண சபை அரச சேவையில் வத்தேகம நகர சபைக்கு லொறி சாரதி/டிராக்டர் சாரதி/செய்தியாளார்/தண்ணீர் தொழிலாளி/மின்சார கம்பியாளர் பதவிகளுக்கு ஆட்சேர்த்தல்

மத்திய மாகாண சபை அரச சேவையில் வத்தேகம நகர சபையில் வெற்றிடமாகியுள்ள கீழ் காணப்படும் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்காக இவ்விளம்பரத்தில் காணப்படும் தகுதிகளுடைய வத்தேகம நகர சபை எல்லைக்குள் நிரந்தரமாக வாழ்பவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இவ்விளம்பரத்தில் இறுதியில் காணப்படும் விண்ணப்பப் படிவத்திற்கமைய வடிவமைக்கப்பட்ட விண்ணப்பம் 2012.08.31 ஆந் திகதிக்கு முன் "செயலாளர், வத்தேகம நகர சபை, வத்தேகம" எனும் முகவரிக்கு கிடைக்கக் கூடியவகையில் பதிவுத்தபாலில் அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பம் அனுப்பப்படும் கடிதவுறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவி குறிக்கப்படவேண்டும். (வத்தேகம நகர சபையில் தற்போது அமைய/நிரந்தர வேலை பார்ப்பவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.)

| பதவிப் பெயர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | சம்பளத் திட்டம் | கல்வித் தகைமைகள் |
|---|---|---|---|
| 1. லொறி சாரதி- III ஆம் வகுப்பு | 01 | 06/2006 iv PL 3 ரூபா 12,470-10X 130-10X145-10X160-12X170- ரூபா 18,860 | க. பொ. த. (சா. த.) பரீட்சையில் 2 முறைக்கு மேற்படாத அமர்வில் சிங்களம்/தமிழ் பாடம் உட்பட குறைந்தது 2 பாடங்களில் திறமைச் சித்தியுடன் 6 பாடங்களில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.<br><br>மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளரினால் வெளியிடப்பட்ட C. C1, D, D1 பிரிவுடைய வாகன ஓட்டும் அனுமதிப்பத்திரம் பெற்றிருக்க வேண்டும்.<br><br>அத்துடன்<br><br>பகல் நேரத்தில், மற்றும் இரவு நேரத்தில் சேவையாற்று வதற்கான தேக ஆரோக்கியமும் அத்துடன் கண்பார்வை சிறப்பாக இருப்பது அவசியம்.<br><br>அத்துடன்<br><br>ஆகக்குறைந்தது 62.5 அங்குலம் உயரமுடையவராக இருக்க வேண்டும். |
| 2. டிராக்டர் சாரதி III ஆம் வகுப்பு | 02 | 06/2006 iv PL 3 ரூபா 12,470-10X 130-10X145-10X160-12X170-ரூபா 18,860 | க. பொ. த. (சா/த) பரீட்சையில் 2 முறைக்கு மேற்படாத அமர்வில் சிங்கள/தமிழ் பாடம் உட்பட குறைந்தது 2 பாடங்களில் திறமைச் சித்தியுடன் 6 பாடங்களில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.<br><br>மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளரினால் வெளியிடப்பட்ட C. C1, D, D1 பிரிவுடைய அனுமதிப்பத்திரம் பெற்றிருக்க வேண்டும்.<br><br>அத்துடன் |

| பதவிப் பெயர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | சம்பளத் திட்டம் | கல்வித் தகைமைகள் |
|---|---|---|---|
| | | | பகல் நேரத்தில், மற்றும் இரவு நேரத்தில் சேவையாற்றுவதற்கான தேக ஆரோக்கியமும் அத்துடன் கண்பார்வை சிறப்பாக இருப்பது அவசியம்.<br>அத்துடன்<br>ஆகக்குறைந்தது 62.5 அங்குலம் உயரமுடையவராக இருக்க வேண்டும். |
| 3. மின்சாரகம்பியாளர் | 01 | 06/2006 iv PL 1 ரூபா 11,730-10X 120-10X130-10X145-12X160-ரூபா 17,600 | க. பொ. த. (சா. த.) பரீட்சையில் 2 முறைக்கு மேற்படாத அமர்வில் சிங்களம்/தமிழ் மொழி, கணித பாடத்துடன் குறைந்தது 6 பாடங்களில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். பதவிக்குரிய மேலதிக தேர்ச்சியை எழுத்து மூலம் நிரூபிக்கும் விண்ணப்பதாரி பற்றி கூடிய கவனம் செலுத்தப்படும். |
| 4. செய்தியாளர் | 01 | 06/2006 iv PL 1 ரூபா 11,730-10X 120-10X130-10X145-12X160-ரூபா 17,600 | க. பொ. த. (சா/த) பரீட்சையில் 2 முறைக்கு மேற்படாத அமர்வில் சிங்கள/தமிழ் மொழி, கணித பாடத்துடன் குறைந்தது 6 பாடங்களில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். |
| 5. தண்ணீர் தொழிலாளி | 01 | 06/2006 iv PL 1 ரூபா 11,730-10X 120-10X130-10X145 -12X160-ரூபா 17,600 | க. பொ. த. (சா/த) பரீட்சையில் 2 முறைக்கு மேற்படாத அமர்வில் சிங்கள/தமிழ் மொழி, கணித பாடத்துடன் குறைந்தது 6 பாடங்களில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். |

**சாரதி ஆட்சேர்ப்பதற்கான பொது நியதிகள் .-** * தகுதி பெற்ற விண்ணப்பதாரிகள் எழுத்து மூலப் பரீட்சைக்கு சமுகமளிக்க வேண்டும்;

* எழுத்து மூலப் பரீட்சையில் சித்தி பெறுபவர்கள் நியமனத்திற்கு முன் மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் மோட்டார் வாகன பரீட்சகர் அல்லது பொலிஸ் வாகன பிரிவின் அலுவலர் ஒருவருடன் கூடிய மூன்று பேரடங்கிய குழுவினரால் நடாத்தப்படும் வாகனஓட்டும் திறமையைப் பரீட்சிக்கும் பரீட்சையில் சித்திபெற வேண்டும் ;

* சேவைக்கு ஆட்சேர்ப்பது உரிய உள்ளூராட்சிமன்ற சபை நியமன அதிகாரி மூலம் நடைபெறும் ;

* சாரதி III ஆம் வகுப்பிற்கு ஆட்சேர்க்கும் போது தனியார்/கூலி வாகனம் ஹொன்டர் 24 க்கு குறைந்த ஸ்டேஷன் வெகன் வாகனம் ஓட்டுவது சம்பந்தமாக மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளரால் விநியோகிக்கப்பட்ட சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும் (ஆட்சேர்க்கும் தினத்திற்கு 3 வருடத்திற்கு முன் உரிய சான்றிதழ் பெறப்பட்டிருக்க வேண்டும். வாகன வகுப்பு C. C1, D, D1, G).

**4. சேவையில் நியமிப்பதற்கான பொது நியதிகள்.-** * இப் பதவி நிரந்தரமானது. ஓய்வூதியம் உடையது. விதவை/தபுதாரன், அநாதைகள் ஓய்வூதிய முறையில் அங்கத்துவம் பெற வேண்டும்.

* அவ்வாறே அரச சேவை நியமனத்திற்குரிய மற்றைய நியதிகளுக்கும் கட்டுப்பட வேண்டும் ;

* நியமிக்கப்படுபவர்கள் 3 வருட நன்னடத்தைக் காலத்திற்கு உள்ளடங்குவதுடன், அக்காலத்திற்குள் வேலை, நடத்தை, வரவு மகிழ்ச்சிக்குரிய முறையில் இல்லாவிடின் பதவியிலிருந்து அகற்றப்படலாம்.

* பகல் நேரத்தில், மற்றும் இரவு நேரத்தில் சேவையாற்றுவதற்கான தேக ஆரோக்கியமும் அத்துடன் கண்பார்வை சிறப்பாக இருப்பதும் அவசியம்.

**வேறு பொது நியதிகளும்.-** * இலங்கைப் பிரசையாக இருக்க வேண்டும். விண்ணப்பதாரி விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று வத்தேகம நகர சபை எல்லைக்குள் 03 வருடத்திற்கு குறையாத கால நிரந்தர பதிவைக் கொண்டவராக இருக்க வேண்டும். (பதிவுதேர்தல் வாக்குப்பதிவேட்டின் மூலமோ, பிரதேச செயலாளரின் அத்தாட்சிப் பத்திரம் மூலமோ உறுதிப்படுத்தப்பட வேண்டும்) ;

* விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று 18 வயதிற்கு குறையாதவராகவும், 45 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். எனினும் ஏற்கனவே அரச சேவையில் உள்ளவர்களுக்கு இவ்வுச்ச வயதெல்லை ஏற்புடையதன்று ;

* விண்ணப்பதாரிகள் வம்சா வழி மூலம், அல்லது பதிவு மூலம் இலங்கைப் பிரசையாக இருக்க வேண்டும் ;

* நன்னடத்தையுடன் சிறந்த தேகாரோக்கியம் உடையவராக இருக்க வேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்டால் ஒரு மாதத்திற்குள் அரசவைத்தியரினால் நடாத்தப்படும் வைத்திய பரீட்சைக்கு உட்பட்டு, அதில் தேகாரோக்கியத்தில் சிறந்தவராக தேர்ந்தெடுக்கப்படாவிடின் பதவியில் இருந்து நீக்கப்படும் ;

* குற்றவியல் வழக்கில் நீதிமன்றத்தினால் குற்றவாளியாக தீர்ப்பளிக்கப்பட்டவராக இல்லாதிருத்தல் வேண்டும் ;

* அரசசேவையில் அல்லது மாகாண சேவையில் சேவை இழிவுக்கு உட்பட்டில்லாதவராகவும், அரச சுற்றறிக்கை 44/90 யின் கீழ் ஓய்வூதியம் பெறாதவராகவும் இருக்க வேண்டும் ;

* அரசசேவையில் அல்லது மாகாண சேவையில் உள்ளவர்கள் விண்ணப்பிக்கும் இறுதித் திகதிக்கு முந்திய 5 வருட காலப்பகுதிக்குள் குற்றத்திற்கு (முன்னெச்சரிக்கை அல்லாது) தண்டனை பெறாதவராகவும், உரிய சம்பள ஏற்றத்தை உரிய திகதியில் பெற்றவராகவும்கொண்ட மகிழ்ச்சிகரமான சேவைக் காலத்தைக் கொண்டிருக்க வேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்டால் விதவை, தபுதாரன், அநாதை ஓய்வூதியத் திட்டத்தில் தொடர்ந்தும் அங்கத்தவராக இருக்க வேண்டும் ;

* வேறு நியதி அமைப்புத் திட்டங்களுக்கு அமைய விண்ணப்பதாரி முப்படை அல்லது பாதுகாப்பு சேவையில் இருந்தால் முறைப்படி சேவையிலிருந்து விலகியவராக இருக்க வேண்டும். (உரிய கடிதங்களின் மூலப்பிரதி சமர்ப்பிக்கப்பட வேண்டும் ;

* இந்த நியமன நியதியும், கொள்கைகளுக்கும் மேலதிகமாக இலங்கைக் குடியரசின் தாபனக் கோவையின் நியதிகளுக்கும், நிதிப் பிரமாணங்களுக்கும், திணைக்கள ஏற்பாடுகளுக்கும் மத்திய மாகாண சபை, வத்தேகம நகர சபையினால் காலத்திற்குகாலம் வெளியிடப்படும் நியதி, ஏற்பாடுகளுக்கு ஏற்ப சேவை செய்ய கடமைப்பாடும் உள்ளது ;

* இந்த ஆட்சேர்ப்பு அறிவித்தலில் ஏற்பாடு செய்யப்படாத எவ்விடயம் தொடர்பாகவும் வத்தேகம நகர சபை செயலாளரின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும் ;

* தற்போது அரச சேவையிலிருக்கும் விண்ணப்பதாரிகள் தமது திணைக்களத் தலைவரினூடாக விண்ணப்பிக்க வேண்டும்.

6. **விண்ணப்பிக்க வேண்டிய முறை.-**

இவ்வறிவித்தலில் உள்ள விண்ணப்பத்தை சரியாக பூரணப்படுத்தி கீழ் காணப்படும் அத்தாட்சிப் பத்திரங்களின் பிரதிகளை இணைத்து 2012.08.31 ஆந் திகதிக்கு முன் எனக்கு கிடைப்பதற்கு அனுப்பி வைக்க வேண்டும் :-

(1) பிறப்பு சான்றிதழ்;
(2) கல்வி சான்றிதழ் ;
(3) வசிப்பதை உறுதிசெய்வதற்கான பிரதேச செயலாளரின் சான்றிதழ்;
(4) அண்மையில் பெற்றுக்கொண்ட நன்னடத்தை சான்றிதழ்.

செயலாளர்,
வத்தேகம நகர சபை,

நகர சபை,
வத்தேகம.

2012.07.25.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**மத்திய மாகாண அரசசேவை .................... பதவிக்கு இணைத்துக் கொள்ளல்**

1. முதலெழுத்துக்களுடன் பெயர் :----.

2. முதலெழுத்துக்களினால் குறிக்கப்படும் பெயர்கள் :----.

3. நிரந்தர முகவரி :----.

4. நிரந்தர வசிப்பிட மாவட்டம் :----.

5. தேசிய அடையாள அட்டை இல. :----.

6. பிறந்த திகதி :

7. விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு வயது :----.

8. ஆண்/பெண் :----.

9. திருமணமானவரா/திருமணமாகதவரா ? :----.

10. இலங்கைப் பிரசையாவது பிறப்பின் மூலமா? பதிவின் மூலமா ? :----.

11. கல்வித் தகைமைகள் :- (பிரதிகள் இணைக்கப்பட வேண்டும்)

க. பொ. த. (சா/த) பரீட்சை

வருடம் :----. சுட்டெண் :----.

| பாடம் | தேர்ச்சி | பாடம் | தேர்ச்சி |
|---|---|---|---|
| | | | |

12. வேறு கல்வித் தகைமைகள் :-----.

13. தொழிற் தகைமைகள் :-----.

14. சேவை அனுபவம் :----.

15. நீங்கள் இப்போதும் இந்த நகர சபையில் சேவையாற்றுபவராக இருந்தால் பதவி :----.

16. நிரந்தர/தற்காலிக/அமைய/ஒப்பந்த அடிப்படையிலா:----.

17. பதவியில் இணைந்த திகதி :----.

18. நீங்கள் எப்போதாவது நீதிமன்றத்தினால் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீர்களா? :----.

19. இந்த விண்ணப்பப் படிவத்தில் என்னால் தரப்பட்ட விபரங்கள் யாவும் நானறிந்த விதத்தில் உண்மை என்று உறுதிப்படுத்துகின்றேன். மேற்குறிப்பிட்ட விபரங்கள் பொய்யானவை என்பது கண்டறியப்பட்டால் நியமனத்திற்கு முன்பு தகைமையிழந்தவர் எனவும் நியமனத்தின் பின்னர் பதவியிலிருந்து நீக்கப்படுவதற்கும் ஆளாகுவேன் எனவும் நான் நன்கு அறிவேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

**தற்போது அரச சேவையில் கடமையாற்றும் விண்ணப்பதாரர்களுக்கு திணைக்களத் தலைவரது சான்றிதழ்**

திரு./திருமதி/செல்வி ........................................ என்பவர் இந்த திணைக்களத்தில் ................. பதவியில் கடமையாற்றுகின்றார் எனவும், இவர் இந்தப் பதவிக்கு தெரிவுசெய்யப்படுவாராயின் தற்போதைய பதவியிலிருந்து விடுவிக்க முடியும்/முடியாது எனவும் இவர் எந்தவித ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்கும் (எச்சரிக்கை தவிர்ந்த) ஆளாகாதவர் எனவும் இத்தால் உறுதிப்படுத்துவதுடன் விண்ணப்பத்தை சிபாரிசு செய்து சமர்ப்பிக்கின்றேன்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

திகதி :----.
(பதவிமுத்திரை இடப்படவேண்டும்)

8-466

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

## கிரிந்த - புஹுல்வெல்ல பிரதேச சபை

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டமூலத்தின் 24 "2" ஆம் சரத்தின்படி வழங்கப்படும் அறிவித்தல்*

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டமூலத்தின் 24 ஆம் சரத்தின் பிரகாரம் தென்மாகாணத்தின் மாத்தறை மாவட்டத்தின் கிரிந்த புஹுல்வெல்ல பிரதேச சபையின் மூலம் பின்வரும் உபபிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள வீதிகள் கிரிந்த புஹுல்வெல்ல பிரதேச சபைக்குச் சொந்தமானதான வீதிகளாக பிரகடனப்படுத்தப்படுகிறது என்பதை இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

02. இவ்வாறு பிரகடனப்படுத்தப்படும் வீதிகள் அடையாளமிடப்பட்டுள்ளவாறு ஏதாவது ஒரு காணியினூடாக எனின் அக்காணியின் உரிமையாளர்களாக உரித்துடையவர்கள் மூலம் ஏதேனும் ஆட்சேபனைகள் முன்வைப்பதாயின், இவ்வறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும் தினத்திலிருந்து ஒரு மாத காலத்துக்குள் உரிமையை நிரூபிப்பதற்காக 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டமூலத்தின் 24 "2" ஆம் சரத்தின்படி செயற்படுத்தப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

03. மேற்குறித்த கால எல்லைக்குள் இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள வீதிகள் தொடர்பாக ஆட்சேபனைகள் முன்வைக்கப்படாதவிடத்து இங்கு குறிப்பிடப்படுகின்ற வீதிகள் கிரிந்த புஹுல்வெல்ல பிரதேச சபைக்குச் சொந்தமான வீதிகளாக பரிபாலிக்கப்படும் என்பதை அதன்மூலம் பிரகடனப்படுத்துகிறேன்.

சனத்ஹெட்டி ஆரச்சி,
தவிசாளர்,
கிரிந்த புஹுல்வெல்ல பிரதேச சபை.

பிரதேச சபை,
கிரிந்த புஹுல்வெல்ல,
2012, யூலை 25.

| தொடர் இலக்கம் | வீதியின் பெயர் | கிராம சேவகர் பிரிவு | ஆரம்பம் | முடிவு | இடதுபக்கக் காணி | வலதுபக்கக் காணி | பாதையின் நீளம் (m) | பாதையின் அகலம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | புஹுல்வெல்ல தேவாலயமுள்ள பொல்கஸ் ஹதரயிலிருந்து அமுத்கெதர வத்த வரை | புஹுல்வெல்ல கிழக்கு | புஹுல்வெல்ல தேவாலயமுள்ள கம்மல்வத்த காணியிலிருந்து | அமுத்கெதரவத்த காணி | 1. கொடகே வத்த<br>2. ஹகுரன்தே கனத்த | கம்மலவத்த | 200 | 16 அடி |
| 02 | தம்மண்டிய மற்றும் யகதுருருப்ப வீதி | புஹுல்வெல்ல மேற்கு | ஸமகி மாவதயின் அலகொலதெனிய தம்மண்டிய காணியிலிருந்து | யகதுருருப்ப காணி முடிவு | 1. அலகொலதெனிய காணியின் முடிவு | 1. அலகொலதெனிய<br>2. யகதுருருப்ப | 100 | 13 அடி |
| 03 | பொரலுகெடிய ஹேன வீதி | ஹெட்டியவாள கிழக்கு | கொளம்பஹேன அம்பலகெதர வீதியின் கொளம்பஹேன காணியிலிருந்து | மொதரவானஹேன காணி | 1. மாரகாஹேன<br>2. பொரலுகெடிய ஹேன | 1. கொளம்பஹேன<br>2. மொதரவான ஹேன | 200 | 10 அடி |
| 04 | தொலகாவஹேன யிலிருந்து ஜுல்கஹகொரடுவ வரையான வீதி | ஹெட்டியவாள தெற்கு | கிரிந்த ஹீல்லகந்த வீதியின் தொலகாவஹேன காணியிலிருந்து | ஜுல்கஹகொரடுவ காணி | 1. உடஹகெதர<br>2. மெதவத்த | 1. தொலகாவஹேன<br>2. மெதவத்த | 350 | 10 அடி |
| 05 | கரதெட கெடமான வீதியின் இரண்டாவது ஒழுங்கை | கரதொட | கரதொட கெடமான வீதியின் அகலபட கும்புரயிலிருந்து | திப்பொடுகொரடுவ காணி | 1. அகலபடகும்புர<br>2. திப்பொடுகொரடுவ | 1. அகலபடகும்புர<br>2. திப்பொடுகொரடுவ | 95 | 10 அடி |
| 06 | தர்மாராமய வீதியின் இரண்டாவது ஒழுங்கை | கரதொட | தர்மாராமய வீதியின் கிரிமடுஹேன காணியிலிருந்து | மேதகொட காணி | 1. கொச்சிகுருப்பு<br>2. கிரிமடுஹேன<br>3. பலுகொடஹேன<br>4. எகொடவத்த | 1. கிரிமடுஹேன<br>2. எகொடவத்த | 160 | 10 அடி |

| தொடர் இலக்கம் | வீதியின் பெயர் | கிராம சேவகர் பிரிவு | ஆரம்பம் | முடிவு | இடதுபக்கக் காணி | வலதுபக்கக் காணி | பாதையின் நீளம் (m) | பாதையின் அகலம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 07 | ரிடிகஹவது கொடைக்குச் செல்லும் வீதி | ஹெட்டியவாள மேற்கு | கிரிந்த கெடமான வீதியின் லிந்தகாவதெனிய கிணற்றிலிருந்து | ரிடிகஹவத்த காணி | முத்தந்திரிய தெனிய வயல் | கீழ் முத்தந்திரிய தெனிய வயல் | 130 | 10 அடி |
| 08 | பதுவத்த வீதி | ஹெட்டியவாள மேற்கு | கிரிந்த கெடமான வீதியின் 2 ஆம் மைல் கல்லிற்கு அருகில் | பதுவத்த காணி | பதுவத்த காணியின் காணித்துண்டுகள் | பதுவத்த காணியின் காணித்துண்டுகள் | 125 | 12 அடி |
| 09 | 13 ஆம் மைற்கல், உடஹ எகொடஹவத்த வீதி | கல்கந்த | எகொடஹவத்த செரமிக் வீதியின் எகொடஹவத்த காணியிலிருந்து | உடஹ எகொடஹவத்த காணி | 1. கனத்தெ கெதர<br>2. உடஹ அட்டிக்ககஹகெதர<br>3. பாடிகெ வத்த<br>4. உடஹ எகொடஹவத்த | எகொடஹவத்த | 150 | 12 அடி |
| 10 | முததெனிய வயலினூடாக நய்தமலஹேன 1ம் ஒழுங்கை | புஹுல்வெல்ல மேற்கு | நய்தமலஹேன வீதியின் எகொடஹவத்த காணியிலிருந்து | இல. 4 காணி | 1. இல. 4 காணி<br>2. இல. 4 ஸஹன் இலக்கக் காணி | இல. 7 காணி | 80 | 12 அடி |
| 11 | அளகொளதெனிய தம்மண்டிய வீதி | புஹுல்வெல்ல மேற்கு | தேவாளமள்ள ஸமகி மாவத | யகதுருருப்ப காணி | 1. அளகொளதெனிய தம்மண்டிய காணித்துண்டுகள்<br>2. யகதுருருப்ப காணித்துண்டுகள் | அளகொளதெனிய தம்மண்டிய காணித் துண்டுகள் | 100 | 12 அடி |
| 12 | நாரத்தகெதர வீதி | கிரிந்த மகின் இஹல- வடக்கு | மாதர-ஹக்மன மதுசர வகுப்பிலிருந்து | நாரத்தகெதர காணி | 1. அந்திரிகொடல்ல<br>2. நாரத்தகெதர<br>3. பரனவத்த | கம்ஹேவத்த | 120 | 12 அடி |
| 13 | ஆண்டிகேவத்த வீதி | கிரிந்த மகின் இஹல- மத்தி | புவக்கஹமடித்த ஆரண்ய வீதியின் ஆண்டிகேவத்த காணியிலிருந்து | போகஹலந்த காணி | 1. ஆண்டிகேவத்த காணியின் சில துண்டங்கள்<br>2. போகஹலந்த காணியின் சில துண்டங்கள் | ஆண்டிகேவத்த காணியின் சில துண்டங்கள் | 150 | 08 அடி |
| 14 | வெலிவத்த வீதி | கரதொட | கரதொட ஹெட்டியவாள வீதியின் கஹம் பிலியாஹேன காணியிலிருந்து | வெலிவத்த காணி | 1. கஹம்பிலியஹேன<br>2. சுதம்பெகேருப்ப<br>3. வெலிவத்த காணியின் சில துண்டங்கள் | 1. சுதம்பெகேருப்ப<br>2. வெலிவத்த காணியின் சில | 175 | 12 அடி |
| 15 | மஹபதுவத்த வீதி | ஹெட்டியாவள தெற்கு | கிரிந்த கெடமான வீதியின் கடவெத்துவகொட கெதர வத்த காணியிலிருந்து | மஹபதுவத்த காணி | 1. ஜுல்கஹ கொரடுவ<br>2. கடவெத்துவ கொட கெதர வத்த | கடவெத்துவகொட கெதர வத்த | 100 | 12 அடி |
| 16 | தன்திரிகே வத்த | ஓவிடிகமுவ வடக்கு 328ஏ | ஹபுவச்சிகே வத்த அலஹேன்பிடி அதுர வீதியின் பரனவத்த காணியிலிருந்து | வெதகெதர காணி | 1. பரனவத்த<br>2. கனுகெடி வயல் | 1. வன்னிகே அரம<br>2. பாழுவத்த<br>3. கனுகெடி வயல்<br>4. கனுகெடி கொடல்ல | 300 | 16 அடி |
| 17 | நவோத்ய வீதி | 325 சீ கிரிந்த மகின் இஹல கிழக்கு | கிரிந்த-ஹீல்லகந்த வீதியின் லாவல்ல கஹகொரடுவ காணியிலிருந்து | ஹெரகஹ கனத்த காணி | 1. லாவல்ல கஹ கொரடுவ<br>2. ஹெரகஹகனத்த | 1. லாவல்ல கஹகொரடுவ<br>2. ஹெரகஹகனத்த | 105 | 12 அடி |
| 18 | இசுரு மாவத | 325எச் வவுலன்பொக்க | கிரிந்த கெடமான வீதியின் கல்கெடியவத்த காணியிலிருந்து | கல்கெடியவத்த காணி | கல்கெடியவத்த | கல்கெடியவத்த காணியின் சில துண்டங்கள் | 75 | 12 அடி |

| தொடர் இலக்கம் | வீதியின் பெயர் | கிராம சேவகர் பிரிவு | ஆரம்பம் | முடிவு | இடதுபக்கக் காணி | வலதுபக்கக் காணி | பாதையின் நீளம் (m) | பாதையின் அகலம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 19 | கடுஇம்புல் கஹகொரடுவ வீதி | புஹுல்வெல்ல மேற்கு 326டீ | தேவாலமுல்ல ஓவிடிகமுவ வீதியின் ரிடிகஹவத்த காணியிலிருந்து | நில்பெல கஹ கொரடுவ | 1. பீல்லாவ காணி 2. கடுஇம்புல் கஹ கொரடுவ | 1. ரிடிகஹவத்த காணி 2. கடுஇம்புல் கஹகொரடுவ | 100 | 10 அடி |
| 20 | களுகலமுள்ள தொலவத்த வீதி | கிரிந்த மகின்பஹல 326 | கிரிந்த கம்புறுபிடிய வீதியின் களுகல முள்ள கெதர வத்த 9 ம் இலக்க காணியிலிருந்து | களுகலமுள்ள கெதர வத்த 1 ஆம் இலக்க காணி | களுகலமுள்ள கெதர வத்த காணியின் சில துண்டங்கள் | களுகலமுள்ள கெதர வத்த காணியின் சில துண்டங்கள் | 100 | 15 அடி |
| 21 | கல்கெடிதெனிய குருக்கு வீதி | ஓவிடிகமுவ வடக்கு | ஓவிடிகமுவ அலுஹேன்பிட வீதியின் கல்கெடிதெனிய கடையிலிருந்து | கொடிவத்த காணி | ஹகுரன்கே வத்த | கல்கெடிதெனிய அத்மக | 250 | 12 அடி |
| 22 | ஹித்தடியகே வத்த வீதி | ஓவிடிகமுவ தெற்கு | ஓவிடிகமுவ தேவாலமுள்ள வீதியின் பதுவத்த கடையிலிருந்து | தெல்கஹஹேன கடை | 1. பதுவத்த அம்பலம காவ வதத் 2. ஹித்தடியகேவத்த | 1. பதுவத்த அம்பலமகாவ வத்த 2. ஹித்தடியகேவத்த 3. தன்திரிகே வத்த | 50 | 12 அடி |
| 23 | வியன்கொடகே வத்த | 328 ஓவிடிகமுவ தெற்கு | ஓவிடிகமுவ தேவாலமுள்ள வீதியின் வியன்கொடகேவத்த காணியிலிருந்து | வியன்கொடகே வத்த காணி | வியன்கொடகே வத்த | வியன்கொடகே வத்த | 50 | 12 அடி |
| 24 | புலத்வெல கொரடுவ வீதி | 325சீ கிரிந்த மகின் இஹல கிழக்கு | கிரிந்த கெடமான பிரதான வீதியின் 1ம் மைல்கல்லிருந்து | தோடம்பந்துர ஹேன காணி | 1. உடஹகடேகெதர வத்த 2. அரம்பெகேவத்த 3. முகலன்கெதர வத்த 4. உடஹகொரடுவ 5. கொடிவலஹேன | 1. உபாஸகெதர வத்த 2. புலத்வெலகொரடுவ 3. உடஹ கொரடுவ 4. தொடம்பந்துரஹேன | 500 | 12 அடி |
| 25 | ஸமகி மாவத | ஓவிடிகமுவ தெற்கு | உல்லல கரபுடுகல வீதியின் வெலிபொதஹேன யிலிருந்து | டீ. எம். தயாவதீ யின் காணி | 1. வெலிபொதஹேன 2. லீலாங்கனவின் காணி 3. தர்மசேன சுதுஸிங்ஹவின் காணி 4. ஜீ. ஜீ. சுதுசிங்ஹ வின் காணி | 1. வெலிபொதஹேன 2. நில்மினியின் காணி 3. எச். எம். ஸரனே லிஸின் காணி | 600 | 12 அடி |
| 26 | பொருவலகே வத்த வீதி | 326ஸீ மல்வது கொட | கிரிந்த கம்புறுபிடிய வீதியின் இம்புல் கஹவத்த அல்லது கடுஇம்புல்கஹவத்த காணியிலிருந்து | கே. ஏ. சாமுவெ லின் காணி | இம்புல்கஹவத்த அல்லது கடுஇம்புல் கஹவத்த காணியின் 03 ஆம் இலக்க துண்டு | கடுஇம்புல்கஹவத்த காணியின் 04ஆம் இலக்க துண்டு | 50 | 12 அடி |
| 27 | புவக்வத்த வீதி | 326ஸீ மல்வது கொட | கிரிந்த கம்புறு பிடிய வீதியின் உஸவத்த காணியிலிருந்து | புவக்வத்த காணி | உஸ்வத்த காணி | 1. பாளுவத்த காணி 2. எகொடவத்த காணி | 55 | 10 அடி |
| 28 | ஸ்ரீ புத்த ஜயன்தி வீதியின் 2ம் குருக்கு வீதி | 326ஸீ மல்வது கொட | ஸ்ரீ புத்த ஜயன்தி வீதியின் வெஹெரகஹ கொரடுவ காணியிலிருந்து | திவெல்வத்த காணி | 1. வெஹெரகஹ கொரடுவ 2. திவெல்வத்த 3. ருப்ப 4. உஸ் ருப்ப | 1. வெஹெரகஹ கொரடுவ 2. மடவளஹேன காணி 3. ஆவாஸ கொரடுவ காணி 4. கிரிமடுவஹேன காணித்துண்டுகள் | 70 | 12 அடி |

| தொடர் இலக்கம் | வீதியின் பெயர் | கிராம சேவகர் பிரிவு | ஆரம்பம் | முடிவு | இடதுபக்கக் காணி | வலதுபக்கக் காணி | பாதையின் நீளம் (m) | பாதையின் அகலம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 29 | ஜம்புகஹஹேன வீதி | 328 ஏ மல்வது கொட வடக்கு | 12 ஆம் மைலி லிருந்து கல்கந்த வீதியின் கஜ்ஜு கஹஹேன காணியிலிருந்து | ஜம்புகஹஹேன காணி | 1. கஜ்ஜுகஹஹேன<br>2. உஸ்ருப்ப<br>3. எகொடஹதெனிய<br>4. பொய்டர் கொரடுவ | 1. ஹேனபால கனத்த காணி<br>2. மடவளஹேன காணி<br>3. ஆவாஸகொரடுவ காணி<br>4. கிரிமடுவஹேன காணியில் சில பகுதிகள் | 500 | 12 அடி |
| 30 | தேக்கவத்த கம்மெத்தெகே வத்த வீதி | ஓவிடிகமுவ தெற்கு | தேவாலமுள்ள வீதியின் தேக்கவத்த காணியின் 20, 22ம் பகுதிகள் | கம்மெத்தெகே வத்த காணி | 1. கம்மெத்தெகே வத்த<br>2. தேக்கவத்த காணியின் 21 பகுதி<br>3. தேக்கவத்த காணியின் 22 பகுதி | 1. கம்மெத்தெகே வத்த<br>2. தேக்கவத்த காணியின் 18 பகுதி<br>3. தேக்கவத்த காணியின் 20 பகுதி | 60 | 12 அடி |
| 31 | மஹகெதர வீதி | 325ஜீ ஓவிடிகமுவ வடக்கு | கரதொட ஹால்தொலவீதி வவ்லியத்த கும்புற மற்றும் ஹால்பந் தெனிய கும்புற விலிருந்து | கண்டம்பிகே பரனவத்த "ஸீ" எழுத்துக் குரிய காணி | 1. ஹால்பந்தெனிய கும்புற<br>2. கஜ்ஜுகஹதெனிய கும்புற<br>3. கண்டம்பிகே கெதரவத்த காணி | 1. வவிலியத்த கும்புற<br>2. கண்டம்பிகே பரனவத்த "ஸீ" எழுத்துக்குரிய காணி<br>3. கண்டம்பிகே பரனவத்த "ஈ" எழுத்துக்குரிய காணி | 150 | 12 அடி |
| 32 | மஹவத்த வீதி | கிரிந்த மகின் இஹல மத்தி | புவக்கஹமடித்த ஆரணிய வீதியின் வடுகெதர காணியிலிருந்து | எம். எச். ஸுனீதா வுக்குச் சொந்த மான வடுகெதர காணி | என். கே. இந்திரசோம வுக்குச் சொந்தமான வடுகெதர காணி | 1. எம். என். அஜித் திற்குச் சொந்தமான வடுகெதர காணியின் ஒருபகுதி<br>2. எம். எச். ஸுனீதாவு க்குச் சொந்தமான வடுகெதர காணியின் ஒரு பகுதி | 35 | 12 அடி |
| 33 | தலல்லேகெதர வத்த வீதி | 325பீ கிரிந்த மகின் இஹல தெற்கு | மாத்தறை-ஹக்மன வீதியின் 11 மைல் அமுகனத்த காணியிலிருந்து | தலல்லேகெதர வத்த காணி | 1. தலல்லேகெதர வத்த<br>2. அமுகெடிய வத்த | 1. தலல்லேகெதரவத்த<br>2. அமுகெடிய வத்த | 30 | 12 அடி |
| 34 | பரன வத்த வீதி | 325ஈ ஹெட்டியா வள தெற்கு | கிரிந்த கெடமான வீதியின் உட தெனிய வத்த காணியிலிருந்து | ஹேனேவத்த காணி | 1. உடதெனிய வத்த காணியின் பகுதிகள்<br>2. மஹபதுவத்த<br>3. ஹேனவத்த | 1. உடதெனிய வத்த<br>2. உயனகேவத்த அல்லது அரம்பகேவத்த<br>3. அரம்பகேவத்த அல்லது அபரக்க கெதர<br>4. ஹேனேவத்த | 200 | 12 அடி |
| 35 | ஜாலத்கே வத்த வெலென்கெடி ஹேன வீதி | ஹெட்டியாவள மேற்கு | ஜாலத்கே வத்த கரயல் கனத்த வீதியின் ஜாலத்கே வத்த காணியிலிருந்து | வெலென்கெடி ஹேன காணி | ஜாலத்கே வத்த | 1. ஜாலத்கே வத்த<br>2. வெலென்கெடிஹேன | 75 | 12 அடி |
| 36 | புஹுூகஹஹேன வீதி | ஹெட்டியாவள தெற்கு | ஸ்ரீ விமலசிரி நாஹிமி மாவத புஹுூகஹஹேன காணியிலிருந்து | அத்அடிய ஹேன காணி | 1. புஹுூகஹஹேன<br>2. அத்அடிய ஹேன | 1. புஹுூகஹஹேன<br>2. அத்அடிய ஹேன | 75 | 14 அடி |
| 37 | லியனகெதர வத்த வீதி | புஹுூல்வெல்ல மேற்கு | நய்கல்கந்த குருக்கு வீதியின் கிமது பிட்டனியவத்த காணியிலிருந்து | லியனகெதர வத்த தெனிய காணி | 1. கெடகாலகஹ வத்த அல்லது கிமதுபிட்டனியவத்த<br>2. லியன கெதரவத்த சில துண்டுகள் | 1. கெடகாலகஹவத்த அல்லது கிமது பிட்டனிய வத்த<br>2. லியன கெதரவத்த சில துண்டுகள் | 150 | 12 அடி |

| தொடர் இலக்கம் | வீதியின் பெயர் | கிராம சேவகர் பிரிவு | ஆரம்பம் | முடிவு | இடதுபக்கக் காணி | வலதுபக்கக் காணி | பாதையின் நீளம் (m) | பாதையின் அகலம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 38 | அரலிய மாவத | கிரிந்த மகின் இஹல மத்தி | புவக்கஹமடித்த ஆரணிய வீதியின் பதொக்கஹஹேன கொரடுவ காணி யிலிருந்து | போகஹலந்த காணி | மஹவத்த | பதொக்கஹகொரடுவ | 55 | 12 அடி |
| 39 | ஜயகொடிஹேன வீதி | கிரிந்த மகின் இஹல கிழக்கு | ஹீல்லகந்த மாவத யின் கால்லஹேன காணியிலிருந்து | ஜயகொடி ஹேன காணி | 1. கால்லஹேன காணி<br>2. ஜயகொடிஹேன காணி | பன்சலை காணி | 120 | 12 அடி |
| 40 | கொவி மாவத | கும்பல்கொட | ஸீலரதன மாவதயின் கும்பல்கொடை பன்சலைக்கு அருகில் நாட்சந்தி யிலிருந்து | உடரட்டே கும்புற | 1. தினுவன் கொடஹேன<br>2. பெரவதெனிய வயல்<br>3. ஹால்பந்தெனிய வயல்<br>4. ஓவிலன்கொடல்ல<br>5. உடரடே கும்புர | 1. அமுனிர வயல்<br>2. தோருபிடிய வயல்<br>3. போடவல வயல்<br>4. மஹகும்புற<br>5. விதான வயல் | 1000 | 12 அடி |
| 41 | அட்டிக்க கஹகொரடுவ பதலவத்த தெனிய வீதி | 326பீ கல்கந்த | செரமிக் வீதியின் ருப்பவத்த காணியிலிருந்து | அட்டிக்ககஹ கொரடுவ | 1. பதலவத்த தெனிய<br>2. அட்டிக்ககஹ கொரடுவ | 1. பதலவத்த தெனிய<br>2. அட்டிக்ககஹ கொரடுவ | 100 | 12 அடி |
| 42 | மடிஹக்கே ஹேன வீதி | 328 ஓவிடிகமுவ தெற்கு | கம்புறுபிடிய-கிரிந்த வீதியின் மடிஹக்கே ஹேன வத்த காணியிலிருந்து | பிரிவு இல. 12 மடிஹக்கே ஹேனவத்த காணி | தெல்கஸ்வத்த காணியின் பகுதிகள் | மடிஹக்கே ஹேன வத்த காணி | 150 | 20 அடி |
| 43 | அமுத்கெதர வீதி | கும்பல்கொட | நாரத்த கொடவெல வீதியின் அமுத் கெதர காணி யிலிருந்து | அமுத்கெதர காணி | திமியன்கஹவத்த காணி | அந்தரயஸ்கே காணி | 50 | 12 அடி |
| 44 | இஹலவத்த வீதி | கிரிந்த மகின் இஹல மத்தி | வடுகெதர வத்த வீதியின் வடுகெதர வத்த காணி யிலிருந்து | இஹலவத்த காணி | வடுகெதர வத்த காணி | தொஸதர கெதர அல்லது மரக்கலவத்த | 100 | 12 அடி |
| 45 | கஜமன்கே வத்த வீதி | 325ஈ ஹெட்டியவாள தெற்கு | கிரிந்த கெடமான வீதியின் பெலிகஸ் கொரடுவ கடையிலிருந்து | கஜமன்கே வத்த காணி | 1. மலபலாகொரடுவ<br>2. கஜமன்கே வத்த | 1. பெலிகஸ்கொரடுவ<br>2. கொரடுவ<br>3. கஜமன்கே வத்த | 132 | 10 அடி |
| 46 | இஹலவத்த புஹுகஹஹேன கொரடுவ வீதி | ஓவிடிகமுவ தெற்கு | தேவாலமுள்ள பிரதான வீதியின் லியனகேவத்த காணியிலிருந்து | புஹுகஹஹேன கொரடுவ காணி | 1. இஹலவத்த<br>2. இஹலவத்தஹேன<br>3. லியனகேவத்த<br>4. வெரலுகஹகெதர | 1. இஹலவத்த<br>2. இஹலவத்தஹேன<br>3. வெரலுகஹகெதர<br>4. லியனகேவத்த | 150 | 12 அடி |
| 47 | மெதகுட்டிய வீதி | ஓவிடிகமுவ தெற்கு | ஓவிடிகமுவ புராதன விஹாரை யிலிருந்து | மெதகுட்டிய காணி | புவக்கஹமடித்த கும்புற காணி | மடவளமுள்ள வயல் | 100 | 12 அடி |
| 48 | பஹலதெனிய தெமஹேன வீதி | வதுகொளகந்த கிழக்கு | வதுகொளகந்த வீதியின் வெலிபொதேதே ஹேன காணியிலிருந்து | மதஹேன காணி | வயல் பாதுகாக்கப்பட்ட காடு | 1. வெலிபொதேஹன<br>2. அல்கிரியே கெதர<br>3. தம்மண்டிய கெதர<br>4. பத்தெவத்தஹேன<br>5. மெதஹேன | 350 | 12 அடி |
| 49 | ஸெல்லவத்த வீதி | கிரிந்த மகின் இஹல மத்தி | மண்டலாராம விஹாரைக்கு முன்னால் | ஸெல்லவத்த காணி | ஸெல்லவத்த காணி | ஸெல்லவத்த காணி | 45 | 10 அடி |

| தொடர் இலக்கம் | வீதியின் பெயர் | கிராம சேவகர் பிரிவு | ஆரம்பம் | முடிவு | இடதுபக்கக் காணி | வலதுபக்கக் காணி | பாதையின் நீளம் (m) | பாதையின் அகலம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 50 | மல்வத்த வீதி | ஹெட்டியாவள தெற்கு | கிரிந்த கெடமான வீதியின் உடஹ வளவ்வத்த காணியிலிருந்து | மல்வத்த காணி | உடஹவளவ்வத்த ஆர காணி | 1. குளுகஹவத்த<br>2. மல்வத்த | 90 | 12 அடி |
| 51 | அடஹின்ன சந்தி வீதியிலிருந்து 'சம்பத்' இல்லம் வரையான வீதி | 327ஏ வதுகொளகந்த வடக்கு | வதுகொளகந்த 10ம் மைல் தூணிலிருந்து அடஹின்ன சந்தி வரை | 'சம்பத்' இல்ல காணி | 1. எம். கே. லலித்தின் காணி<br>2. ஜீ. ஏ. சுனிலின் காணி | 1. எச். கே. ரவனியின் காணி<br>2. ஜீ. ஜீ. யு. வஸன்த வின் காணி | 25 | 10 அடி |
| 52 | கோங்கஹவத்த வீதி | 326ஸீ மல்வதுகொட | கஹவின்ன வீதியின் கோங்கஹவத்த காணியிலிருந்து | கோங்கஹவத்த காணி | அம்பகஹவத்த காணி | கோங்கஹவத்த காணி | 35 | 10 அடி |
| 53 | தெல்கஹவத்த வீதி | 326ஏ ஓவிடிகமுவ வடக்கு | ஓவிடிகமுவ 12 ஆம் மைல் கல்லிருந்து வல்ல ஹேன கல்கந்த வீதியின் கல்தொல யிலிருந்து | தெல்கஹவத்த காணியின் ஈ தொகுதி | 1. கல்தொல<br>2. தெல்கஹவத்த காணியின் பீ, ஸீ, டி தொகுதிகள் | 1. கல்தொல ஆரம்ப வயல்<br>2. தெல்கஹவத்த காணயின் ஜீ, ஈ, ஐ, எப் தொகுதிகள் | 200 | 12 அடி |
| 54 | பெடிகஹஹேன வீதி | 325 ஈ ஹெட்டியாவள கிழக்கு | கிரிந்த கெடமான வீதியின் நுகஹேன காணியிலிருந்து | பெடிகஹஹேன காணி | 1. நுகஹேன<br>2. பெடிகஹஹேன<br>3. அஹலகஹஹேன | 1. நுகஹேன<br>2. பெடிகஹஹேன<br>3. அஹலகஹஹேன | 100 | 10 அடி |
| 55 | அபரெக்க கெதர வீதி | 325ஈ ஹெட்டியாவள கிழக்கு | பழைய வீதியின் அபரக்க கெதர காணியிலிருந்து | பீ. எம். சதுர சாமிந்த வின் காணி | அபரக்க கெதர காணியின் சில பகுதிகள் | அபரக்க கெதர காணியின் சில பகுதிகள் | 90 | 12 அடி |
| 56 | எகமுது மாவத | புஹுல்வெல்ல மேற்கு | ஓவிடிகமுவ தேவாளமுள்ள வீதியின் தேவாள முள்ள பாடசாலை யிலிருந்து | திரிகொன்ன கஹ வத்த | தேவாளமுள்ள பாடசாலை | ருப்பெகெதர வத்த | 100 | 12 அடி |
| 57 | பஸ்நாயக ருப்ப மாவத | 290 கரதொட | ஹெட்டியாவள கரதொட வீதியின் பஸ்நாயக ருப்ப காணியிலிருந்து | பஸ்நாயக ருப்ப காணி | பஸ்நாயக ருப்ப காணியின் சில பகுதிகள் | பஸ்நாயக ருப்ப காணியின் சில பகுதிகள் | 90 | 12 அடி |
| 58 | சுமிதுரு மாவத | புஹுல்வெல்ல கிழக்கு | சுஹத மாவதவின் கடவத்துவகே வத்த காணி யிலிருந்து | கடவத்துவகே வத்த | உடுகல்மொடே கெதர காணி | 1. கடவத்துவகே காணி<br>2. உடஹகெதர வத்த | 50 | 14 அடி |
| 59 | கிதுல் உயன உடஹஹேன வீதி | 325ஈ ஹெட்டியாவள தெற்கு | கிதுல் உயன வீதி | உடஹஹேன காணி | கிதுல் உயன உடஹ ஹேன காணியின் சில பகுதிகள் | கிதுல் உயன உடஹ ஹேன காணியின் சில பகுதிகள் | 200 | 12 அடி |
| 60 | சுஹத மாவத | 327டி வதுகொளகந்த கிழக்கு | அக்க 100 வீதியின் 70 ஹேனயிலிருந்து | கொடகே வத்த காணி | 1. துரிந்து செவன இல்லக் காணி<br>2. கொடகே வத்த காணி | 1. அமாதி இல்லக் காணி<br>2. இல. 70 இல்லக் காணி<br>3. திமுது செவன காணி | 200 | 14 அடி |
| 61 | உடஹ கோப்பி வத்த மாவத | புஹுல்வெல்ல கிழக்கு | பஹலவத்த பஹல தெனிய வீதியின் உடஹகோப்பி வத்த காணி யிலிருந்து | உடஹ கோப்பி வத்த | உடஹ கோப்பி வத்த காணியின் சில பகுதிகள் | உடஹ கோப்பி வத்த காணியின் சில பகுதிகள் | 100 | 12 அடி |
| 62 | பாத்ரா கொட வீதி | புஹுல்வெல்ல கிழக்கு | சமன முள்ள பன்சலை வீதியின் அல்கனத்த காணியிலிருந்து | மஹவத்த காணி | 1. அல்கனத்த காணி<br>2. கலஹிடிய காணி<br>3. பாத்ராகொட காணி | 1. அல்கனத்த காணி<br>2. பாத்ராகொட காணி | 250 | 12 அடி |

| தொடர் இலக்கம் | வீதியின் பெயர் | கிராம சேவகர் பிரிவு | ஆரம்பம் | முடிவு | இடதுபக்கக் காணி | வலதுபக்கக் காணி | பாதையின் நீளம் (m) | பாதையின் அகலம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 63 | ஹொரகஹ வத்த வீதி | கிரிந்த மகின் இஹல தெற்கு | மாத்தரை ஹக்மன வீதியின் அஜித் டயர் வேக்ஸ்ஸி லிருந்து | ஹொரகஹவத்த காணி | ஹொரகஹவத்த காணியின் 7, 8, 5ஏ, 5பீ, பகுதிகள் | ஹொரகஹவத்த காணியின் 4ஏ, 4பீ, பகுதிகள் | 225 | 12 அடி |
| 64 | கெகிரிவராஹேன வத்த அல்லது கலகாவ கொரடு வைக்குச் செல்லும் வீதி | 327டி வதுகொள கந்த கிழக்கு | வளகந்த வீதியின் கடேகெதர கடையிலிருந்து | கெகிரிவராஹேன காணி | அம்பலம்காவதெனிய வயல் | அம்பலம்காவதெனிய | 200 | 12 அடி |
| 65 | தெல்காஹேன வீதி | ஓவிடிகமுவ தெற்கு | கிரிந்த கம்புறுபிடிய வீதியின் தெல் கஹஹேன காணியிலிருந்து | தெல்காஹேன காணி | தெல்காஹேன காணியின் 3, 10, 9, 11, 12 ஆம் இலக்கக் காணிகள் | தெல்காஹேன காணியின் 2, 1, 4, 6 ஆம் இலக்கக் காணிகள் | 85 | 12 அடி |
| 66 | வதுகொளகந்த சுமுது பிரதேச வீதி | வதுகொளகந்த வடக்கு | கிரிந்த வளகந்த வீதியின் சுமுது பிரதேச 01ம் இலக்கக் காணியிலிருந்து | சுமுது பிரதேச 06 ஆம், 10 ஆம் இலக்கக் காணிகள் | சுமுது பிரதேச 01 ஆம், 02ஆம், 04 ஆம், 6 ஆம் இலக்கக் காணிகள் | சுமுது பிரதேச 07 ஆம், 08 ஆம், 09ஆம், 10 ஆம் இலக்கக் காணிகள் | 100 | 12 அடி |
| 67 | கிதலகம கெதர வீதி | கிரிந்த மகின் இஹல மத்தி | மகிலியஹேன கெதர | கிதலகம கெதர | கிதலகம கெதர காணி | கிதலகம கெதர காணி | 11 | 12 அடி |

8-461

---

## திருகோணமலை நகர சபை

நகரசபை கட்டளைச்சட்டம் அத்தியாயம் (255)

நகரசபை கட்டளைச்சட்டம் 255 ஆம் பிரிவு 44(2) இன் பிரகாரம் கீழ்குறிப்பிடப்படும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள நகரசபையினுடைய பொதுப்பாதை இத்தால் பிரசுரிக்கப்படுகின்றது.

திருகோணமலை நகர சபை நிர்வாக எல்லைக்குள் அமைந்துள்ளதும், கீழ்குறிப்பிடப்படும் அட்டவணையில் காட்டப்பட்டதுமான இப்பொதுப்பாதை நகரசபைக்கு உரித்தானதென்பதும் அபிவிருத்தி செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது என்பதும் இத்தால் மேலும் தெரிவிக்கப்படுகின்றது.

க. செல்வராஜா,
தலைவர்,
நகராட்சி மன்றம்,
திருகோணமலை.

25.07.2012.

### அட்டவணை

| தொடர் இல. | வீதி | வீதியின் ஆரம்பப் புள்ளியும், இறுதிப்புள்ளியும் | பாதையின் நீளம் | வீதி எல்லைக்கோடு |
|---|---|---|---|---|
| 01 | பிரதானவீதி | கடற்படைத்தள வீதி, திருஞானசம்பந்தர் வீதி | 960M | வீதியின் மத்தியிலிருந்து 25 அடி |

8-462

**மஹரகம நகர சபை**

*நகரசபை கட்டளைச் சட்டத்தின் (255 ஆம் அத்தியாயம்) 50 ஆம் மற்றும் 52 ஆம் பிரிவுகளின் நியதிகளின்படியிலான அறிவித்தல்*

நகரசபை கட்டளைச் சட்டத்தின் (255 ஆம் அத்தியாயம்) 50 ஆம் மற்றும் 52 ஆம் பிரிவுகளின் நியதிகளின்படி மேல் மாகாணத்தில் கொழும்பு மாவட்டத்தில் உள்ள மஹரகம பிரதேச செயலாளர் பிரிவில் மஹரகம நகரசபையின் எல்லைகளில் அமைந்துள்ள பின்வரும் அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்ட வீதிகள் மஹரகம நகர சபைக்கு உரிய வீதிகளாக பிரகடனப்படுத்தப்படல் வேண்டும் என்று பொதுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதன்படி அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்ட வீதிகள் மஹரகம நகர சபையினால் உடைமையாக்கப் படுகின்றன எள்று இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

02. பொதுமக்கள் அல்லது உரிய காணி உடைமையாளர்களிடமிருந்து இந்த விடயம் குறித்து எதேனும் ஆட்சேபனை இருப்பின் அத்தகைய ஆட்சேபனைகள் பொருட்டான காரணங்கள் வர்த்தமானியில் இந்த அறிவித்தல் பிரகரிக்கப்பட்ட திகதியிலிருந்து ஒரு மாத காலப் பகுதியினுள் எழுத்தில் கொடுக்கப்படல் வேண்டும்.

03. ஆட்சேபனைகள் எதுவும் குறிப்பிடப்பட்ட காலப்பகுதியினுள் தெரிவிக்கப்படாவிடில் அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்ட வீதிகள் மஹரகம நகரசபைக்கு சொந்தமானதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு கட்டுப்படுத்தப்படும் என்று இத்தால் பொதுமக்களின் தகவல் பொருட்டு அறிவிக்கப்படுகின்றது.

காந்தி கொடிகார,
தலைவர்,
மஹரகம நகரசபை.

நகர சபை அலுவலகம்,
மஹரகம,
2012.07.20.

**அட்டவணை**

| வீதியின் பெயர் | விவரணம் | ஆரம்ப மதிப்பீட்டு இல. | இறுதி மதிப்பீட்டு இல. | நீளம் அடி | அகலம் அடி |
|---|---|---|---|---|---|
| பன்னிப்பிட்டிய, தெப்பானம உயனஎத்த ஒழுங்கையில் 60/24, 60/15, 60/23 60/24, 75/25 ஆம் இலக்க வீடுகள் அமைந்துள்ளதோ அந்த ஒழுங்கை | 1998 யூலை 29 ஆந் திகதியன்று 6095 ஆம் இலக்க வரைபடத்தில் உரிமம்பெற்ற நில அளவையாளர் மிரயா சமரநாயக்கவினால் அளவிடப்பட்டு வரையப்பட்ட வீதி | 60/21 | 75/25 | 80 | 10 |

8-497

---

**1946 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க பொது மயான பூமி மற்றும் தனியார் மயான பூமி சம்பந்தமாக கட்டளைச்சட்டத்தின் II பந்தியின் 5(1) வாக்கியத்தின் கீழ் எடுக்கப்படும் அறிவித்தல்**

வடமேல் மாகாண சபையின் பிரதான அமைச்சு மற்றும் உள்ளூராட்சி அமைச்சராகிய சட்டத்தரணி அதுல விஜேசிங்க ஆகிய என்னால், குருநாகல் மாவட்டத்தின், குருநாகல் பிரதேச சபைக்குட்பட்ட பிரதேசத்திலிருக்கும், பின்வரும் அட்டவணையில் காட்டப்படும் மயான பூமி பொது மயான பூமி மற்றும் தனியார் மயான பூமி சம்பந்தமாக 1946 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்கத்தையுடைய கட்டளைச்சட்டத்தின் II பந்தியின் 5(1) வாக்கியத்தின்கீழ் பிணத்தை புதைத்தல் மற்றும் சுடுதலுக்கான பொது மயான பூமியாக பிரகடனப்படுத்தப்படுகின்றது.

(சட்டத்தரணி) அதுல விஜேசிங்க,
வடமேல் மாகாண பிரதான அமைச்சு.

வடமேல் மாகாண பிரதான அமைச்சு,
2012, ஓகத்து 03.

**அட்டவணை**

| | மயானத்தின் பெயர் | அமைவிடம் | வரைபடத்தின் இலக்கம்/ திகதி | காணியின் அளவு | எல்லை |
|---|---|---|---|---|---|
| 1 | மரலுவாவ பாபர்வத்த பொது மயானம் | மரலுவாவ | 2014/2007.09.04 | 0ஏ.03றூ. 1பே. | வடக்கிற்கு : டீ. எஸ். தீ சில்வா மற்றும் ஏனையோர் உரிமை கூறும் பாபர்வத்த<br>தெற்கிற்கு : பி. வ. கு/1638 காணித்துண்டு இல. 02<br>கிழக்கிற்கு : புகையிரத பாதையும் பாதுகாப்பும் பி. வ. 2269<br>மேற்கிற்கு : பி. வ. கு/ 1638 காணித்துண்டு இல. 12/2 |
| 2 | போகிடியவத்த பொது மயானம் | நைலிய | 86/2008/2008.03.18 | 0ஏ.02றூ.7.6பே. | வடக்கிற்கு : கிராமத்தின் மத்தியிலுள்ள பாதை<br>தெற்கிற்கு : ஆர். பீ. ஜயவர்தனயின் காணி ;<br>கிழக்கிற்கு : என். பீ. ஜயவர்தனயின் காணி ;<br>மேற்கிற்கு : ஜே. பீ. சந்திரசேகரயின் காணி. |
| 3 | உடதிகன பொது மயானம் | உடதிகன | 194/ 2009.09.17 | 0ஏ.02றூ.8.48பே. | வடக்கிற்கு : எம். ஏ. சோமவதியின் காணி ;<br>தெற்கிற்கு : என். குணவர்தன மற்றும் எஸ். எம். நிமல் கருணாதிலக உரிமை கூறும் வயல்;<br>கிழக்கிற்கு : சந்திரா ஹேரத் உரிமை கூறும் காணி;<br>மேற்கிற்கு : என். குணவர்தன உரிமை கூறும் காணி. |
| 4 | அத்தனபிடிய பொது மயானம் | அத்தனபிடிய | 145/2010/2010.08.17 | 0ஏ.01றூ.16.1பே. | வடக்கிற்கு : எஸ். சோமபால உரிமை கூறும் காணி;<br>தெற்கிற்கு : ஜி. சிரில் ரத்னாயக மற்றும் ஏனையோர் உரிமை கூறும் காணி ;<br>கிழக்கிற்கு : தென்னகோன் உடகெதர மற்றும் ஏனையோருக்கு உரிமையான காணி ;<br>மேற்கிற்கு : எஸ். சிரிசேன மற்றும் ஏனையோர் உரிமை கூறும் குடும்ப மயானம். |

8-566

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.